**மாகாணக் கல்வித் திணைக்களம் - வடமாகாணம்**

**இரண்டாம் தவணைப் பரீட்சை -2023**

**புவியியல்**

**தரம் - 9** | | **இரண்டுமணித்தியாலம்**

பகுதி - I

❖ மிகப் பொருத்தமானவிடையினைத் தெரிவு செய்க.

1. உலகசனத்தொகையில் 60%மானோர் வாழ்கின்ற கண்டம் எது?
   (1) ஆபிரிக்கா (2) வடஅமெரிக்கா (3) ஆசியா (4) ஐரோப்பா
2. ஆபிரிக்காவிலிருந்து ஆசியாவை வேறுபடுத்தும் எல்லையாக அமைந்துள்ள கடல்
   (1) கஸ்பியன் கடல் (2) அரபிக்கடல் (3) வெண்டல் (4) செங்கடல்
3. புராதன காலத்தில் அன்யான் நகரை அடிப்படையாகக் கொண்டு வளர்ச்சிபெற்றிருச்த நதிக்கரை நாகரிகம்
   (1) மொசப்பத்தேமிய நாகரிகம் (2) சிந்துவெளி நாகரிகம்
   (3) குவாங்கோ நாகரிகம் (4) எகிப்திய நாகரிகம்
4. ஆசியாவில் உள்நாட்டுக் கடல்களைச் சென்றடையும் நதிகள்
   (1) ஓப், அமுர் (2) யூரல் நதி, அமுடேரியா
   (3) குவாங்கோ, யாங்சி (4) கங்கை, பிரம்மபுத்திரா
5. சர்வதேச மற்றும் மத்திய கிழக்குப் பிரதேசத்தின் வர்த்தக மையமாக விளங்கும் நகரம்
   (1) டுபாய் (2) சென்னை (3) கொழும்பு (4) பீஜிங்
6. இலங்கையின் இடைநிலைச் சமவெளியில் காணப்படும் தரைத்தோற்ற அம்சங்களைக் கொண்ட சரியான விடைத் தொகுதி
   (1) வெள்ளச்சமவெளிகள், எச்சக் குன்றுகள்
   (2) தொடரலைநிலங்கள், ஓங்கல்கள்
   (3) பாறைத் தொடர்கள், சதுப்பநிலங்கள்
   (4) முனைகள், மேட்டுநிலங்கள்
7. இரண்டு மலைகளுக்கு இடையில் அமைந்த தாழ்நிலம்
   (1) சமவெளி (2) கணவாய் (3) தொடரலைநிலம் (4) தனத்திடைக்குன்று
8. மகாவலிகங்கையில் அமைக்கப்பட்டுள்ள நீர்த்தேக்கங்கள்
   (1) விக்டோரியா, கொத்மலை நீர்த்தேக்கங்கள்
   (2) கலாவாவி, இராஜாங்கனைக் குளம்
   (3) கலாவாவி,சேனநாயக்காசமுத்திரம்
   (4) உடவளவை, ரன்தெனிகல நீர்த்தேக்கங்கள்
9. நீண்டகால வானிலை நிலைமைகளின் சராசரி
   (1) பருவநிலை (2) காலநிலைமாற்றம்
   (3) வளிமண்டலநிலைமை (4) காலநிலை

10. பின்வரும் இயல்புகளையுடைய காலநிலை வலயம் எது?

- வருடாந்த சராசரி வெப்பநிலை27℃
- வரண்டபருவம் இல்லை
- வருடம் முழுவதும் மழைவீழ்ச்சி

(1) அரைவறள் வலயம் (2) தாழ்நில ஈரவலயம்
(3) மலைநாட்டு ஈரவலயம் (4) மலைநாட்டு உலர்வலயம்

11. ஈரவலயம் மற்றும் உலர் வலயத்தினை வேறுபடுத்தும் இடைமாறு வலயத்தில் பரந்துள்ள காடுகள்
(1) என்றும் பசுமையான இடைவலயக் காடுகள்
(2) என்றும் பசுமையான உலர்கலப்புக் காடுகள்
(3) என்றும் பசுமையான ஈரக் காடுகள்
(4) மலைநாட்டு ஈரவலயக் காடுகள்

12. கலமெட்டியாவ, புந்தல, முத்துராஜவெல போன்ற பிரதேசங்களுக்கு உரித்தான இயற்கைத் தாவரம்
(1) முட்புதர்கள் (2) கண்டல் தாவரங்கள்
(3) பற்றைக் காடுகள் (4) கலப்புக் காடுகள்

13. இலங்கையில் உலர் மற்றும் ஈரவலயங்களை ஊடறுத்துச் செல்லும் நதி
(1) மகாவலி கங்கை (2) களனி கங்கை
(3) மாணிக்க கங்கை (4) வளவ கங்கை

14. இலங்கையில் அதிக சனத்தொகை கொண்ட மாவட்டம் எது?
(1) களுத்துறை (2) குருநாகல் (3) கொழும்பு (4) யாழ்ப்பாணம்

15. நகர குடியிருப்புக்களின் பண்புகளில் ஒன்று
(1) முதனிலைப் பொருளாதாரச் செயற்பாடுகள் இடம்பெறும்
(2) சன அடர்த்தி குறைந்தபகுதிகள்
(3) சிதறல் குடியிருப்புக்கள்
(4) வரையறுக்கப்பட்ட நிலப்பகுதி

16. அம்பேவெல,பட்டிப்பொல, பொலன்னறுவை ஆகிய பிரதேசங்களில் மேற்கொள்ளப்படும் பொருளாதார நடவடிக்கை
(1) தேயிலைச் செய்கை (2) நெற்செய்கை
(3) மீன்பிடித் தொழில் (4) விலங்குவேளாண்மை

17. வரண்ட வலயத்தின் சிறப்பம்சமாகக் கருதப்படுவது
(1) விருத்தியடைந்த வீதிகள் (2) வளர்ச்சியடைந்த கட்டடங்கள்
(3) குளத்தொகுதி (4) அதிக சனத்தெகை அடர்த்தி

18. தரைக்கீழ் நீரைப் பயன்படுத்தி விவசாய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் பிரதேசம்
(1) யாழ்ப்பாணக் குடாநாடு (2) உலர்வலயம்
(3) மத்தியமலைநாடு (4) ஈரவலயம்

19. பின்வருவனவற்றுள் பௌதிக அம்சங்களை உள்ளடக்கிய சரியான விடைத் தொகுதி
(1) தேவாலயம், சிறுவீதி, குடியிருப்பு
(2) நதி, சமவெளி, பற்றைக்காடு
(3) வைத்தியசாலை, கிளையாறு, பிறவீதிகள்
(4) சேற்றுநிலம், மாவட்டஎல்லை, பாடசாலை

20. இலங்கையின் $1:50,000$ இடவிளக்கப்படங்களில் புகையிரதப் பாதைகளைக் குறித்தக் காட்டுவதற்குப் பயன்படுகின்ற நிறம்
(1) சிவப்பு (2) மஞ்சள் (3) இளநீளம் (4) கறுப்பு


($20 \times 2 = 40$ புள்ளிகள்)

பகுதி - II

➢ **முதலாம் வினா உட்பட ஐந்து வினாக்களுக்கு விடை தருக.**

1. தரப்பட்டுள்ள ஆசியப் புறவுருவப் படத்தில் A தொடக்கம் L வரைகுறி ஆங்கில எழுத்துக்களுக்குப் பொருத்தமான அம்சங்களை அ தெரிந்தெடுத்து எழுதுக.

**(டோக்கியோ, திபெத் மேட்டுநிலம், யூரல் மலைத்தொடர், குவாங் வங்காளவிரிகுடா, பைக்கால் ஏரி, மலாக்காநீரிணை, ஈராக், மாலைதீவு, ஒல்கொட் கடல்)**




| | | | |
|---|---|---|---|
| A - | ........................................................................ | G - | ................................ |
| B - | ........................................................................ | H - | ................................ |
| C - | ........................................................................ | I - | ................................ |
| D - | ........................................................................ | J - | ................................ |
| E - | ........................................................................ | K - | ................................ |
| F - | ........................................................................ | L - | ................................ |

2. (i) யூரேசியா என அழைக்கப்படும் கண்டங்களைப் பெயரிடுக.

(ii) (a) உலகில் அதிக மழைவீழ்ச்சி பெறும் இடம் எது?

(b) மேற்குறித்த பிரதேசம் அமைந்துள்ள நாடு எது?

(iii) ஆசியாக் கண்டத்தில் அமைந்துள்ள மேட்டுநிலங்கள் மூன்றைக் குறி

(iv) ஆசியப் பிரதேசத்தின் சிறப்பம்சங்கள் இரண்டினைக் குறிப்பிட்டு சுரு

3. (i) ஆசியப் பிரதேசத்தில் வாழும் இரண்டு மனித வர்க்கத்தைக் குறிப்பிடுக. *(02 புள்ளிகள்)*

(ii) ஆசியாக் கண்டத்தின் சமனற்ற சனத்தொகைப் பரம்பலைத் தீர்மானிக்கும் இரண்டு பௌதிகக் காரணிகளைக் குறிப்பிடுக. *(02 புள்ளிகள்)*

(iii) ஆசியாவின் அதிகசன அடர்த்தி கொண்ட மூன்று வலயங்களை தருக. *(03புள்ளிகள்)*

(iv) ஆசியாவின் பிரதான கைத்தொழில் நாடாக யப்பான் முக்கியத்துவம் பெறுவதற்கான இரண்டு காரணங்களைச் சுருக்கமாக விளக்குக. *(05புள்ளிகள்)*

4. (i) பௌதிக நிலத்தோற்றத்தின் பிரதான கூறுகள் இரண்டினைக் குறிப்பிடுக. *(02 புள்ளிகள்)*

(ii) கீழே தரப்பட்டுள்ள உயரவரையறையைக் கொண்ட இலங்கையின் தரைத்தோற்ற வலயங்களைப் பெயரிடுக.

(a) கடல் மட்டம் - $30\,m$ வரை

(b) $300\,m$க்கு மேல் *(02 புள்ளிகள்)*

(iii) இலங்கையில் அமைந்துள்ள மலைத்தொடர்கள் மூன்று தருக. *(03புள்ளிகள்)*

(iv) இலங்கையின் கரையோரச் சமவெளியில் காணப்படும் இரண்டு தரைத்தோற்ற அம்சங்களைக் குறிப்பிட்டு சுருக்கமாக விளக்குக. *(05புள்ளிகள்)*

5. (i) இலங்கை மழைவீழ்ச்சியைப் பெறும் இரண்டு முறைகளைக் குறிப்பிடுக. *(02 புள்ளிகள்)*

(ii) இலங்கையின் வெப்பநிலைப் பரம்பலில் செல்வாக்குச் செலுத்தும் இரண்டு காரணிகளைக் குறிப்பிடுக. *(02 புள்ளிகள்)*

(iii) இலங்கையின் தாழ்நில உலர்வலயத்தின் சிறப்புப் பண்புகள் மூன்றைக் குறிப்பிடுக. *(03புள்ளிகள்)*

(iv) இலங்கையில் காடுகள் அழிக்கப்படுவதற்கான காரணங்கள் இரண்டினைக் குறிப்பிட்டு சுருக்கமாக விளக்குக. *(05புள்ளிகள்)*

6. (i) குடியிருப்புக்கள் தோற்றம் பெற்றமைக்கான இரண்டு காரணங்களைக் குறிப்பிடுக. *(02 புள்ளிகள்)*

(ii) இலங்கையில் காணப்படும் இரண்டு கைத்தொழில் நகரங்களைப் பெயரிடுக. *(02 புள்ளிகள்)*

(iii) இலங்கை அரசினால் வீதிப் போக்குவரத்து அபிவிருத்திக்காக மேற்கொள்ளப்பட்டுவரும் மூன்று நடவடிக்கைகளைக் குறிப்பிடுக. *(03புள்ளிகள்)*

(iv) நீர் மற்றும் மின்சாரத்தினைச் சிக்கனமாகப் பயன்படுத்த நாம் கடைப்பிடிக்க வேண்டிய இரண்டு வழிமுறைகளைச் சுருக்கமாக விளக்குக. *(05புள்ளிகள்)*